## கூட்டமைப்பின் வேட்பாளர் கைது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை வேட்பாளர் உதயசிறியையும் மற்றொருவரையும் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

யாழ். பண்ணையில் கடந்த 24ஆம் திகதி தன்னைச் சிலர் தாக்கினர் என உதயசிறி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் பொலிஸார், சந்தேகத்தின் அடிப்படையில் நால்வரைக் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையிலேயே வேட்பாளர் உதயசிறியையும் மற்றும் ஒருவரையும் கைது செய்தனர். (ச)

10/=

# எதிரொலி Ethiroli

Registered as a Newspaper in Srilanka

குரல் 01 அதிர்வு 248 சனிக்கிழமை ஜனவரி 27 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

# ரூ. 9 இலட்சம் கோடி எங்கே?



## அரசியலில் இருந்தும் விலகேன்

### ஊடக ஆசிரியர்கள் சந்திப்பில் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 27

'இலங்கை கடந்த 10 ஆண்டுகளில் 10 இலட்சம் கோடி ரூபாவை கடனாகப் பெற்றுள்ளது. இதில் ஒரு இலட்சம் கோடி ரூபாவுக்கு மட்டுமே கணக்குக் காட்டப்பட்டுள்ளது. மிகுதி 9 இலட்சம் கோடி ரூபாவுக்கும் என்ன நடந்தது என்றே தெரியவில்லை."

ஊடகங்களின் ஆசிரியர்கள், பிரதிநிதிகளுடன் நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடத்

06

## விபத்தில் காயமடைந்த இளைஞரும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

அராலி வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் எரிகாயமடைந்த இளைஞர் ஒரு மாதத்தின் பின்னர் உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி யதீஸ்வரன் (வயது -30) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

06

## 9 மாகாணங்களுக்கும் சமஷ்டி வழங்குங்கள்

யாழ்ப்பாணம், ஜன.27

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு எனத்தனியாக சமஷ்டியைத்தர வேண்டாம், சகல மாகாணங்களுக்குமே அந்த அதிகாரத்தைத் தாருங்கள். தமிழர்களுக்கு சமஷ்டியைப் பெற்றுத் தர இந்தியா உதவ வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார் வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

06

## மது வாங்குவது: மாதுவின் உரிமை! எப்படித் தடுக்கலாம் என வழக்காம்!

கொழும்பு, ஜன. 27

மதுபானங்களை கொள்வனவு செய்வது பெண்களின் உரிமை. இதைத் தடுத்ததன் மூலம் அரசியலமைப்பில் தங்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் மீறப்பட்டு விட்டது எனத் தெரிவித்து நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராகப் 13 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மதுபான விற்பனை நிலையங்களில் பெண்கள் பணியாற்ற முடியும். மது வகைகளைக் கொள்வனவு செய்ய முடியும். இரவு 10 மணி வரை நிலையங்களை திறக்க முடியும் என அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை நிதியமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டார். ஆனால் ஜனாதிபதியின் அழுத்தத்தால் இந்த அறிவிப்பு மீளப் பெறப்பட்டது.

இதன்மூலம் அரசியலமைப்

06

## போதைப் பொருள் வாங்கவே மூதாட்டி அடித்துக் கொலை!

### 21 வயது இளைஞன் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஜன. 27

போதைப் பொருள் வாங்கப் பணம் இல்லாததால் மூதாட்டியைக் கொன்று நகைகளை எடுத்துச் சென்றார் என 21 வயது இளைஞர் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஆனைக்கோட்டை பொன்னையா வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜெகநாதன் சத்தியபாமா (வயது 72) என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார். அவர் அணிந்திருந்த நகைகள் காணாமல் போயிருந்தமையால் அதற்காகவே இக்கொலை இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் பொலிஸார் அப்பகுதியின் வீடொன்றில் இருந்த சி.சி.ரீ.வி. கமெராவை சோதித்து சந்தேகத்

06

## 'கிறீன் கார்ட்' திட்டத்தை மாற்ற அமெரிக்கா முடிவு

வோஷிங்டன், ஜன. 27

குலுக்கல் முறையில் கிறீன் கார்ட் அல்லது நிரந்தர வசிப்பாளர் அட்டையை எச். 1பி விஸாவினருக்கு வழங்கும் முறையை ஒழிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முடிவு செய்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் பல நாடுகளைச் சேர்ந்த 50,ஆயிரம் பேருக்குக் குலுக்கல் முறையில் கிறீன் கார்ட் வழங்கப்படுகின்றது. இந்த முறைமையை மாற்றப்படவுள்ளது.

புதிய திட்டத்தின் மூலம் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் பேருக்கு எச். 1பி விஸா

06



## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று யாழ். மாநகர சபை மைதானத்தில் ஆரம்பமானது.

9 ஆவது வருடமாக இடம்பெறும் இந்நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மத்திய தொழில்துறை அமைச்சர் தயாகமகே, சிறுவர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், இந்தியத் துணைத்

06


## உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்



பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# சிறுவனைத் தாக்கியோர் பிணையில் விடுவிப்பு

கிளிநொச்சி, ஜன.27

சிறுவன் மீது தாக்குதல் மேற்கொண்ட சிறைச்சாலைக் காவலர்கள் நால்வரும் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 23 ம் திகதி மாலை கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் சிறைக்காவலர்கள் பயணித்த சிறைச்சாலை பஸ்ஸும், துவிச்சக்கரவண்டி ஒன்றும் விபத்துக்குள்ளாகின. அப்போது சிறுவனே விபத்துக்கு காரணமெனக் கூறி, காயமடைந்த சிறுவனை சிறைக்காவலர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கியிருந்தனர்.

குறித்த சிறுவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் யாழ். சிறைச்சாலைக் காவலர்கள் நால்வரும் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சரணடைந்த போது, பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்ட போது, குறித்த நால்வரையும் தலா ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

இதேவேளை, சிறுவன் தாக்கப்பட்டதனை நேரில் கண்ட சாட்சியாக கிளிநொச்சி சுயாதீன ஊடகவியலாளர் ஒருவரது வாக்கு மூலம் கிளிநொச்சி பொலிஸாரால் கோரப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த ஊடகவியலாளரின் கைத்தொலைபேசியில் எடுக்கப்பட்ட வீடியோவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அ)




முல்லைத்தீவு, ஜன.27

கேப்பாபிலவில் விடுவிக்கப்பட்ட காணிகளில் உள்ள சுமார் இருபத்து நான்கு கிணறுகள் படைத்தரப்பால் சுத்திகரிகரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த இரு தினங்களாக நடைபெற்று வரும் இந்த சுத்திகரிப்புப் பணிகள் விரைவில் முடிவடையும் எனவும், அதன் பின்னர் குறித்த கிணறுகளை மக்கள் பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# விபத்தில் இளைஞன் சாவு

வவுனியா,ஜன.27

வவுனியா, விநாயகபுரம் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வவுனியா, அரபா நகர் பகுதியை சேர்ந்த சஜா( வயது- 28) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

மேசன் வேலைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த குறித்த இளைஞன் பயணித்த மோட்டர் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதாலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்தச்சம்பவம் குறித்த விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தலைவர் பிறந்த மண்ணில் துரோகி சுமந்திரனுக்கு இடமா?

## சட்டத்தரணி சுகாஸ் கேள்வி



வடமராட்சி, ஜன.27

"இரண்டு கோடிக்கு ஆசைப்பட்டு வரவு-செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூத்தாடிகள் இன்னும் 10 கோடிக்கு ஆசைப்பட்டு எமது இனத்தை காட்டிக்கொடுத்து விற்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? எங்கள் தலைவர் பிறந்த மண்ணிலிருந்து எப்போது துரோகி சுமந்திரனை அகற்றப்போகின்றோம் ?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார் சட்டத்தரணி சுகாஸ்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் கரவெட்டியில் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

"எங்கள் தலைவன் பிறந்த வரலாற்றுப் பெருமைவாய்ந்த இந்த வடமராட்சி மண்ணிலே, எங்கள் அண்ணன் கஜேந்திர குமார் பிறந்த இந்த மண்ணிலே எவ்வாறு சுமந்திரன் என்கின்ற ஒரு துரோகி உலாவிக்கொண்டிருக்கிறார் ? இவரை எப்பொழுது நாங்கள் இந்த மண்ணிலிருந்து அகற்றப்போகின்றோம். இதுதான் என் முன்னே எழுகின்ற கேள்வி. இந்தக் கேள்விக்கான பதிலை இந்த மண்ணும் மக்களும் விரைவிலே அளிக்க வேண்டும். ஏனென்றால் இன்று இவர்கள் தமிழனத்தை விலை பேசி விட்டார்கள். ஒட்டுமொத்த தமிழினத்தையும் முப்பது கோடிக்கு ஆசைப்பட்டு இவர்கள் விலைபேசிவிட்டார்கள்.

கடந்த வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது ஆரம்பத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்த வரவுசெலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதாக இருந்தார்கள். வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பின் முதல்நாள் இரவு வரை அதனை எதிர்த்து வாக்களிப்பதாகவே திட்டம் இருந்தது. ஆனால் வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்புக்கு முன்பாக காலை 10 மணியளவில் ரணில் விக்கிரமசிங்கவோடு ஒரு மந்திராலோசனை நடந்தது. அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இரண்டு கோடி பரிமாறப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்க இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், வெறும் இரண்டு கோடிக்கு ஆசைப்பட்டு அதனை ஆதரித்து வாக்களித்தனர்.

இரண்டு கோடிக்கு ஆசைப்பட்டு வரவுசெலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்த இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூத்தாடிகள் இன்னும் ஒரு 10 கோடிக்கு ஆசைப்பட்டு எமது இனத்தை காட்டிக் கொடுத்து விற்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

இதற்காகவே எங்கள் தலைவர் போராடினார்? இதற்காகவா 20 ஆயிரம் மாவீரர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தார்கள்?

கண்களை இழந்து, கால்களை இழந்து தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேளைகளுக்கு துரோகம் இழைத்துக்கொண்டிருக்கின்றது இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

கைதட்டல்களுக்காகவோ போலி வாக்குறுதிகளுக்காகவோ இதனை நான் கூறவில்லை. இனியும் அவர்களை விட்டு வைத்தால் போலி வாக்குறுதிகளுக்காக அவர்கள் எங்கள் இனத்தை விற்று அமைச்சுப் பதவிகளை எடுத்து சுகபோக வாழ்க்கையை அனுபவிப்பார்கள். இது நிச்சயம் நடக்கும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# கூட்டமைப்பைத் தோற்கடிக்கவே போலி தேசியக் கட்சிகள் களத்தில்

மட்டக்களப்பு, ஜன. 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேர்தலில் தோற்கடிக்க தேசிய கட்சிகள் போலி வேட்பாளர்களை களமிறக்கியுள்ளன என கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன் தெரித்தார்.

தேசியக் கட்சிகள் தமிழ் மக்களின் வாக்குகளை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன என்றும் அவர் சாடினார்.


மட்டக்களப்பு, பாரதிபுரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

11 வருடமாக இந்த நாட்டை கொடுங்கோல் ஆட்சிசெய்து வந்த மஹிந்த ராஜபக்சவை அந்த ஆசனத்தில் இருந்து தூக்கி எறியத் தமிழ் மக்கள் அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டார்கள்.

அந்த வெற்றியின் அறுவடைதான் 2015ஆம் ஆண்டு இந்த நாட்டில் புதிய கூட்டு அரசாங்கத்தை கொண்டு வந்தமையை யாவரும் அற்ந்திருப்பீர்கள் - என்றும் கருணாகரம் தெரிவித்தார். (ச)

# யாழ்ப்பாணத்தில் இந்தியக் குடியரசு தினம்







இந்தியாவின் குடியரசு தின நிகழ்வு யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்தியத் துணைத் தூதுவர் நடராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். (அ)

எதிரொலி
Ethiroli
சனி, 27 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## யாருடைய கண்காட்சி?

யாழ்ப்பாணத்தில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி ஆரம்பமாகியுள்ளது. ஒரு பக்கம் தேர்தல் திருவிழா களைகட்டியுள்ள தருணத்தில், இன்னொரு பக்கமாக வர்த்தகத் திருவிழா. பல இடங்களில் இருந்தெல்லாம் வர்த்தக நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களோடு வந்து கடை பரப்பியுள்ளன. நல்ல விடயம் தான். புதிய உற்பத்திப் பொருட்களையும், அவற்றின் பயன்பாட்டையும், உற்பத்தி செய்யும் நுட்பங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு வழக்கமாக கடைகளில் வாங்கும் விலையை விட இங்கு குறைந்த விலையில் சிலபொருள்களைப் பெறலாம் என்ற எண்ணமும் பலருக்குண்டு.

ஆனால் ஒரு படத்தில் வடிவேலு சொல்வதைப் போல, இந்த முறை வர்த்தகக்கண்காட்சியில் காட்சி கூடங்களில் உள்ளவைகளில் பெரும்பாலானவை 'தேவையில்லாத ஆணிகள்' தான். அதிலும் அரைவாசிக்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்களை இந்திய நிறுவனங்களே ஆக்கிரமித்தும் இருந்தன. சட்டெனப் பார்த்தால், யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சியா, அல்லது இந்திய வர்த்தகக் கண்காட்சியா என்ற சந்தேகம் பலருக்கும் வந்துவிடலாம். அந்தளவுக்கு இந்திய மூவர்ணக் கொடியை நினைவுபடுத்தும் அலங்காரப் பலகைகளோடு இந்திய நிறுவனங்களே அதிகளவில் யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் கோலோச்சுகின்றன.

அதேவேளை, பெயரில் மட்டும் 'யாழ்ப்பாணம்' என்பதைத் தாங்கி நிற்கும் இந்த வர்த்தகக் கண்காட்சியில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்களின் காட்சிக்கூடங்களை வலை போட்டுத் தேடினாலும் அரிதாகத்தான் காணக்கிடைக்கிறது. அதற்கு ஒரு காரணம், யாழ்ப்பாணத்தில் புதிய, பயனுள்ள பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மிகக் குறைவுதான். பனம் பொருள் உற்பத்திகளும், கடல் சார் பொருள் உற்பத்திகளுமே ஓரளவுக்குக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவுக்கு இருக்கின்றன. அதை விடுத்து, பெரும்பாலும் இறக்குமதிக் கலாசாரத்துக்கு யாழ்ப்பாணம் மாறிவிட்டதால் உள்ளூர் உற்பத்தி பற்றி யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

இங்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் காட்சிக் கூடங்கள் குறைவாக இருப்பதற்கு இன்னொரு காரணம், வர்த்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்தவர்கள், அதிகூடிய தொகையில் காட்சிக் கூடங்களை வழங்கியமை. ஒரு காட்சிக்கூடம் சுமார் 80 ஆயிரம் ரூபாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்படிப் பெருந்தொகை பணத்தைக் கொடுத்து இந்தக் கண்காட்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்ற கட்டாயமோ, அந்தளவு பணத்தைக் கொடுக்கக்கூடிய பொருளாதார இயலுமையோ, உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருக்கப் போவதில்லை. இதனை கண்காட்சியில் தனது உரையிலும் வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

'வசதி படைத்தவர்களுக்கு அதிக தொகையில் காட்சிக்கூடங்களை வழங்கிவிட்டு, உள்ளூர்க்காரர்களுக்கு கழிவுகளைக் கொடுத்துள்ளதாக' அவர் அந்த மேடையிலேயே குத்திக் காட்டியுள்ளார்.

இனி வரும் வர்த்தகக் கண்காட்சிகளிலாவது உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு சலுகைக் கட்டணத்திலோ, அல்லது கட்டணமற்றோ இந்தக் கண்காட்சியில் பங்குபற்ற வழி செய்ய வேண்டும். அப்போது தான் அது உண்மையான யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி என்ற அர்த்தப் பெறுமானத்தை அடைய முடியும். இல்லாவிடில் இம்முறை அரைவாசிக் காட்சிக்கூடங்களை ஆக்கிரமித்த இந்தியா, அடுத்த முறை முழுக்காட்சிக் கூடங்களையும் குத்தகைக்கு எடுக்ககூடும். எல்லாம் காசு செய்யும் வேலை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமான சமயம்...



# நான் நன்றாகவே சமைப்பேன்! கண்காட்சியில் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன.27

"எனக்கு நன்றாகவே சமைக்க தெரியும். சமைக்க விருப்பம் இருந்தும் தற்போது சமைக்க வாய்ப்பு இல்லை" என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று ஆரம்பமாகிய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி கூடத்தை திறந்து வைத்த முதலமைச்சரிடம், சமையல் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது எனது அம்மாவும், மனைவியும் உயிருடன் இல்லை. அவர்கள் இருக்கும் போதே எனக்கு நன்றாக சமைக்கத் தெரியும். ஆனால் தற்போது சமைப்பதுக்கான வாய்ப்புக்கள் எனக்கில்லை. அதனால் சமைப்பதில்லை. சமைக்க எனக்கு விருப்பம்" என தெரிவித்தார். (ச)

# கூட்டமைப்பு உரிமைகளுடன் அபிவிருத்தியையும் தரவில்லை

## சாடுகிறார் அங்கஜன் எம்.பி.



கொழும்பு, ஜன.27

'பொருளாதார ரீதியாக தன் நிறைவடையாத எந்த இனமும் உரிமைகளைப் பெற முடியாது. கடந்த காலத்தில், உரிமைகளைப் பெற்றுத் தருகிறோம் என பொய் கூறியவர்களை நம்பி தமிழ் மக்கள் வாக்களித்து உரிமையைப் பெற தவறிய அதேவேளை அபிவிருத்தியையும் பெற இயலாதவர்கள் ஆகிவிட்டனர்"

இப்படி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தென்மராட்சியில் இடம்பெற்ற அவர் நடத்திய மக்கள் சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

கடந்த காலங்களில் வட்டார ரீதியிலான தேர்தல் இல்லாமையால் மக்கள் யாரையும் ஏன் எமது கிராமத்தை அபிவிருத்தி செய்யவில்லை என கேள்வி கேட்க முடியாது. அவர்களை கண்களால் காண்பதும் அரிது. ஆனால் இம்முறை வட்டார ரீதியிலான தேர்தல் என்பதால் வேட்பாளர்களும், நீங்கள் தெரிவு செய்யும் உறுப்பினர்களும் உங்களது வட்டாரத்திலேயே இருப்பர். ஆகவே கிராம அபிவிருத்தியை முன்னெடுப்பது சுலபமானது. கடந்த காலத்தில் நீங்கள் வாக்களித்தவர்கள் உரிமையை பெற்றுத் தருவதாகக் கூறி இறுதியில் அபிவிருத்தியைக் கூட அவர்களால் பெற்றுத்தர முடியவில்லை.

இன்று எம்.பிமார் 2 கோடி பிரச்சினைக்கு சண்டை பிடிப்பது எமது கிராமத்திற்கு வீதி அமைப்பதற்கோ அல்லது வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதற்காகவோ அல்ல. அவர்கள் சண்டை பிடிப்பது அவர்களது அதிகாரம் மற்றும் பணத்திற்காகவே. அவர்கள் எமது கிராம அபிவிருத்தியை கருத்தில் கொள்ளவில்லை. இதை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். கடந்த கால தேர்தல்களில் நாம் போட்ட வாக்குகளின் விளைவுகளைத் தான் நாம் இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

இதன் விளைவே பாழடைந்த வீதியும், அபிவிருத்தி இன்றிய கிராமமும். எமது நோக்கம் கிராம அபிவிருத்தி. கிராமு அபிவிருத்தி இல்லாமையால் இன்றைய இளைஞர்கள் வேலை வாய்ப்பைத் தேடி வேறு நாடுகளுக்கு செல்கின்றனர். கிராம அபிவிருத்தி இன்மையால் சமுதாய சீரழிவு ஏற்படுகிறது. இதன் விளைவே அதிகரித்த மதுப்பாவனை, ஆவாக்குழு, வன்புணர்வு மற்றும் போதைவஸ்து போன்ற சமூக விரோத செயற்பாடுகள் அனைத்தும் வேலை இன்மையால் ஏற்படுகின்றன - என்றார். (ச)

## இன்று நாளும் கோளும்

27.01.2018 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 14 ஆம் நாள்
தசமி பி.ப. 07.26 மணி வரை | ஏகாதசி மு.ப. 04.30 வரை | அமிர்தசித்தயோகம்
இராகுகாலம் 09.00 - 10.30 | சுபநேரம் மு.ப. 07.30 - 08.30 | எமகண்டம் மு.ப. 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| களிப்பு | வரவு | ஆர்வம் | சாந்தம் | செலவு | பாசம் | உறுதி | உதவி | கீர்த்தி | கவனம் | இலாபம் | காரியசித்தி |

# மகிந்த அணியினரை இணைத்து புதிய ஆட்சி

## ஐ.தே.க.வின் திட்டம் இது!



கொழும்பு, ஜன.27

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்ததும் மகிந்த அணியின் எம்.பிக்கள் பலரை எம்முடன் இணைத்துக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சி நிச்சயம் தனித்து ஆட்சி அமைக்கும்" என்று ஐக்கிய தேசிய கட்சி எம்.பி துசார இந்துனில் தெரிவித்துள்ளார்.

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்ததும் மஹிந்த அணியின் எம்பிக்கள் பலரை தம்முடன் இணைத்துக் கொண்டு ஐக்கிய தேசிய கட்சி நிச்சயம் தனித்து ஆட்சி அமைக்கும். இந்த மூன்று வருடங்களுக்குள் நாம் பெரும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். சர்வதேசம் விதித்திருந்த சில பொருளாதாரத் தடைகளை நீக்கியுள்ளோம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் வெற்றி எம்மை அடுத்த கட்டத்துக்கு அழைத்துச் செல்லும். கிராமங்கள் தோறும் எமது அபிவிருத்தியையும் அரசியலையும் மேலும் விஸ்தரிப்பதற்கு இந்த வெற்றி உதவும். பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் பல எமது கைகளில் உள்ளன. அவற்றை நிறைவேற்றுவதற்கு உள்ளூராட்சி சபைகளை எங்களதுகைகளில் ஒப்படைக்குமாறு நாம் மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம்" என்று அவர் தெரிவித்தார். (அ)

## பாலத்தில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஜன.27

மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் கீழே பொறியியலாளர் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கல்லடி பாலத்தில் இருந்து குதித்ததாகத் தெரிவிக்கப்படும், மின்சார அத்தியட்சகரான க.உமாரமணன் (வயது-33) என்பவருடைய சடலமே அதுவென அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா, ஜன.27

வவுனியா இராசேந்திரன்குளம் பகுதியில் கஞ்சாப் பொதியுடன் ஒருவரை நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா இராசேந்திரன்குளம் பகுதியில் வீதியால் சென்ற ஒருவர் சந்தேகத்துகிடமாக நடந்து கொண்டதால், அவரைச் சோதனையிட்ட போதே, பொலிஸாரால் அவரிடமிருந்து கஞ்சாப் பொதி ஒன்று மீட்கப்பட்டது. சூடுவெந்தபிலவு பகுதியைச் சேர்ந்த 52 வயதான நபரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவருக்கு எவ்வாறு கஞ்சா கிடைக்கப்பெற்றுள்ளது போன்ற ஏனைய விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## ரணிலைப் பிரதமர் பதவியிலிருந்து அனுப்புகிறீர்களா? அனுப்பட்டுமா?

### மஹிந்தானந்த அளுத்கமகே கேள்வி



கொழும்பு, ஜன.27

"பிணை முறி மோசடிக்கு தலைமை தாங்கிய பிரதமரை தொடர்ந்தும் அந்தப் பதவியில் வைத்திருக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. அவர் உடனடியாக வேறு ஒருவரை பிரதமராக நியமிக்க வேண்டும். இல்லாவிட்டால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வெற்றியின் ஊடாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாம் வீட்டுக்கு அனுப்புவோம்" என்று மஹிந்த அணி எம்பி மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

"கொள்ளையை நிறுத்தப் போவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சியே இப்போது கொள்ளையடித்துள்ளது. இது நல்லாட்சி அல்ல. பிணை முறித் திருட்டுக்கு தலைமை தாங்கிய பிரதமரை தொடர்ந்தும் அந்தப் பதவியில் வைத்திருக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. அவர் உடனடியாக வேறு ஒருவரை பிரதமராக நிறுத்த வேண்டும்.

நாம் பிணை முறி ஊடாக 4000 பில்லியன் ரூபா மோசடி செய்ததாக இவர்கள் கூறுகின்றனர். 12 லட்சம் ரூபா மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் நானும் 7 லட்சம் ரூபா மோசடிக் குற்றச்சாட்டிக்கீழ் கெஹலியவும் 52 லட்சம் ரூபா மோசடிக் குற்றச்சாட்டிக்கீழ் ஜோன்சன் பெர்னாண்டோவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டோர். அப்படியாயின் 4000 பில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றிருந்தால் இவர்கள் சும்மா இருப்பார்களா?

ஐக்கிய தேசிய கட்சியால் ஒரு போதும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது. இந்தத் தேர்தலில் இந்தக் கட்சிக்கு ஏற்படும் தோல்வியை அடுத்து இந்தக் கட்சியில் இணைந்திருக்கின்ற பல கட்சிகள் எம்முடன் இணைந்துவிடும். ஐக்கிய தேசிய கட்சி ஒரு காலத்தில் கௌரவமான கட்சியாக இருந்தது. இப்போது அந்த கௌரவத்தை அக்கட்சி இழந்து விட்டது. இணைத்த மூன்று வருட ஆட்சியில் இடம்பெற்ற கொள்ளையே இதற்குக் காரணம். இந்தத் தேர்தலின் பின் ஐக்கிய தேசிய பழைய நிலைக்குச் சென்றுவிடும். இனிமுன்புபோல் பல தசாப்தங்களுக்கு எதிர்கட்சியிலேயே இருக்க வேண்டிவரும். மோசடி செய்த ரணிலைப் பதவியில் இருந்து ஜனாதிபதி அகற்றாவிட்டால், உள்ளூராட்சித் தேர்தல் வெற்றி மூலம் ரணிலை நாம் வீட்டுக்கு அனுப்ப வேண்டியிருக்கும்." என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## இயல்வாணனின் இருநூல்கள் வெளியீடு






கிளிநொச்சி, ஜன.27

கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. ஸ்ரீகுமரன் (இயல்வாணன்) எழுதிய 'செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்' மற்றும் 'பாக்கியம் பாட்டியின் விண்வெளி பயணம்' என்ற இந்த இரு நூல்களின் வெளியீடு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் நூல்களை வெளியிட்டு வைக்க தொழிலதிபர் பகிரதன் பெற்றுக்கொண்டார். நூல் மதிப்பீட்டுரைகளை அருட்தந்தை கலாநிதி யோசுவா, கிளிநொச்சி மகாவித்தியாலய ஆசிரியர் குகபரன் ஆகியோர் நிகழ்த்தினர். (அ)



## பொய் சொல்ல ஒரு உப்பு

காலமை ஆறு மணி இருக்கும். பனி சாதுவாப் பெய்து கொண்டிருந்திது. கோயிலுக்குப் போட்டு வரேக்கை பாத்தால், சமையல் சந்திரன் ஆத்துப் பறந்து ஓடி வாறான். என்னைக் கண்ட உடனை "அண்ணை சந்திக் கடை திறந்து கிடக்கே" எண்டு கேட்டான். "இப்ப தான்ரா கடை முதலாளி வந்து கடை திறக்கிறான்" எண்டன் நான். "சரி அண்ணை போட்டு வாறன்" எண்டு ஓடிப்போய் ஐஞ்சு நிமிசத்திலை வந்தான். வந்தவனிட்டை "என்னடா அவ்வளவு அவசரம்" எண்டன் நான். "இல்லை அண்ணை உங்கை ஒரு சம்மந்தம் கலப்பாம். அதுக்கு நூறு றோல்ஸ்ஸுக்கு ஓடர் வந்திருக்கு அதுதான் ஓடுறன்" எண்டவனிட்டை விடாமல் கேட்டன். "ஓடர். சரி. அதுக்கேன்டா ஆரோ கிணத்துக்கை விழுந்த மாதிரி ஓடுறாய்" எண்டு கேட்டன்." அண்ணை கிணத்துக்கை விழுந்ததிலும்விட இது "சீரியஸ் கேஸ்" விட்டால் இந்த ஓடர் வேறையாருக்கும் போவிடும். அதைச் செய்யிறதுக்குரிய எல்லாச் சாமாங்களையும் வாங்கி வைச்ச மனுசி அஜினோமோட்டோவை மட்டும் மறந்து போச்சுது" எண்டான்.

"அதென்னடா நான் கேள்விப்படாதது. கசுக்கொட்டை முந்திரி வத்தல் கேள்விப்பட்டிருக்கிறன். கசகசா கேள்விப்பட்டிருக்கிறன். அமெரிக்கன் மா ஆட்டா மா கேள்விப்பட்டிருக்கிறன். அதென்னடா அஜினாமோட்டர். வாயுக்குள்ளாலை வருகுதில்லை" எண்டன். "அண்ணை. றோல்ஸ்ஸைப் பொரிச்சாப் பிறகு. உதைத் தூவி விட்டால் பின்னேரம்வரை மொறு.... மொறு எண்டிருக்கும். வாய்க்கும் ருசியாக் கிடக்கும். தெரியிதோ" எண்டு சொன்னபடி நிக்காமல் பறந்திட்டான்.

எனக்கெண்டால் அவன் சொன்ன அஜினமோட்டோ என்ன எண்டதை அறிய வேணும்போலை கிடந்திது. அவன் சொன்னதிலை அதைப் பற்றி கொஞ்சம் அறிய வேணும்போலை கிடந்திது. அது தொண்டேக்கை அடைக்கத் துவங்கிவிட்டிது. சந்தர்ப்பத்தைப் பாத்துக் கொண்டிருந்தன். இனிமேல் சமையல் சந்திரனை விளக்கம் கேட்டால் விரிவாச் சொல்லமாட்டான் எண்டு எனக்கு வடிவாத் தெரியும். வேறை ஆரேன் விசியந் தெரிஞ்சவை வரட்டும் எண்டு பாத்துக் கொண்டிருந்தன்.

மற்ற நாள் முதலீன்ரை மருமோன் வன்னியிலை இருந்து தங்கைக்கு கலியாணம் எண்டு சொல்லிக் காட்டைக் கொண்டு வந்தான். "என்னடா தம்பி செய்யிறாய்" எண்டு கேட்டன். "மெடிக்கல் கொலிஜ்சிலை மூண்டாம் ஆண்டு படிக்கிறன்" எண்டான். வாச்சுப் போச்செண்டு உடனை நேரடியாக் கேக்கேல்லை. சுத்தி வளைச்சு கடைசியாத்தான் கேட்டன். "அது ஒரு சுவையூட்டி உப்பு. இப்ப உதுதானே பிரச்சினை பாருங்கோ. கண்டகண்ட கடையிலையும் சாப்பிடப் பயமாக் கிடக்கு. எல்லாத்துக்கையும். ஏன்? கொழும்பிலை சைவக்கடைச் சாம்பாறுக்கையும் உதைத்தானே போடுறாங்கள். சிங்களச் சாப்பாட்டுக் கடைகளிலை கீரை வறைக்குள்ளையும் உது கட்டாயம் போடுறவை. பொதுவா ருசி இல்லாமல் சமைச்ச சாப்பாட்டு க்கை உதைப் போட்டால் நாக்குக்கு அந்தச் சாப்பாட்டைச் சுவையா இருக்கெண்டு மூளையைக் கொண்டு பொய் சொல்லி ஏமாத்திறதுதான் உந்த உப்பின்ரை வேலை. கொத்து றொட்டிக்கையும், பிறைட் றைஸ்ஸுக்கையும் உது கட்டாயம் போடுவினம். தெரியுதோ? கன நாளைக்கு உந்த உப்பைச் சாப்பிட்டால் எலும்பெல்லாம் பெலமில்லாமல் போய் இத்துப் போகும் எண்டு சொல்லுறவையாம். ஆனால் அந்த விளக்கமில்லாமல் சனங்கள் உதைத்தானே அதிகம் விரும்பிச் சாப்பிடியினம். பொய்க்கும், கூடாததுக்குந்தான் அதிக டிமாண்ட் ஆக இருக்கு. ஆனபடியால் அப்பிடிப்பட்ட சாப்பாட்டை வாங்கிச் சாப்பிட்டிட்டு வருத்தைத்தைத் தேடாதையங்கோ. என்ன, வரட்டே? எண்டபடி எழும்பிப் போட்டான். கதை உருசையிலை பெடிக்குத் தண்ணி கூடக் குடுக்கேல்லை, மறந்து போனன். பாருங்கோவன் மனுசர்தான் பொய் சொல்லுறவை. இப்ப உப்பும் பொய் சொல்லுது எங்கடை அரசியல்வாதியளைப் போல. பொய்சொல்ல ஒரு உப்பு. கேக்கப் பயமாக் கிடக்கு.

- வில்லங்கம் விநாசி

# விஞ்ஞானபீட மாணவன் மீது சிங்கள மாணவர்கள் தாக்கு!

வவுனியா, ஜன.27

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீட மாணவனைச் சிங்கள மாணவர்கள் தாக்கியதால் மாணவர்களிடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்தில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக மாணவர் விடுதியில் பிரயோக விஞ்ஞான பீடத்தின் முதலாம் வருடத் தமிழ் மாணவர்கள் தங்கியிருந்தனர். அந்த விடுதிக்கு இரவுவேளையில் வந்த இரண்டாம் வருட சிங்கள மாணவர்கள் குறித்த மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு சென்றுள்ளனர்.

இதன் போது காயமடைந்த மாணவனை அவரது சக நண்பர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முற்பட்டனர். இதன் போது "நீங்கள் விடுதலைப்புலிகள், ஆகையால் இராணுவத்தினரின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுங்கள்" எனச் சிங்கள மாணவர்கள் பணித்துள்ளனர். இதன் போது சிங்கள் மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு விடுதி காப்பாளர் சென்றவுடன் சிங்கள மாணவர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

அதன் பின்னர் அவரை அவரது நண்பர்கள் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்த்தனர்.

குறித்த பல்கலைக்கழக மாணவனுக்கு நெஞ்சு, வாய் பகுதிகளில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சிகிச்சைகளை மேற்கொண்டு வருவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். இது குறித்து வவுனியா வைத்தியசாலைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ)

## அந்த நாள் ஞாபகம்...!



**1962.01.27**

இலங்கையில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசுக்கு எதிராக இலங்கைப் படைத்துறையினர் சிலரால் மேற்கொள்ளப்பட்ட இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டது.

## ரயில் சேவை நிறுத்தம்

கொழும்பு, ஜன.27

மதவாச்சிக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான ரயில் சேவையை, பெப்ரவரி மாதம் 1ஆம் திகதியிலிருந்து மார்ச் மாதம் 31ஆம் திகதிவரையில், தற்காலிமாக 2 மாத காலத்துக்கு இடைநிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக, ரயில்வே திணைக்களத்தின் மேலதிக பொது முகாமையாளர் விஜயசமரசிங்க தெரிவித்தார். தலைமன்னார் இறங்குதுறைக்கும் மதவாச்சிக்கும் இடையிலுள்ள பாலங்கள் சில புனரமைக்கப்படவுள்ளதே இதற்கு காரணமாகும். (அ)

## மைத்திரிக்கு மட்டுமே ஜனாதிபதியாகும் தகுதி



கொழும்பு, ஜன.27

"யார் என்ன சொன்னாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி மைத்திரிக்கு மட்டும்தான் உண்டு. அதற்கான பொருத்தமான சூழலை சுதந்திரக் கட்சி உருவாக்கியுள்ளது "என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார்.

"ஊழலை ஒழிப்பதற்காக நாட்டு மக்கள்" ஜனாதிபதி மைத்திரி பாலவுக்கு வழங்கிய ஆணைக்கு ஏற்ப அவர் செயற்பட்டுள்ளார். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் கொதித்துப் போயுள்ளனர். யார் என்ன சொன்னாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகுதி மைத்திரிக்கு மட்டும் தான் உண்டு. அதற்கான பொருத்தமான சூழலை சுதந்திரக் கட்சி உருவாக்கியுள்ளது.

மைத்திரி மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி, அவமானப்படுத்தி , அவரின் அரசியல் பயணத்தை திசை திருப்புவதற்கு ஐக்கிய தேசிய கட்சி எடுக்கும் நடவடிக்கை ஒருபோதும் வெற்றியளிக்காது.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு முயற்சி எடுப்பதுபோலவே சுதந்திரக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்க முயற்சி செய்கிறது.

அதுமாத்திரமன்றி, உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் நாம் தனித்தே ஆட்சி அமைப்போம். ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டுச் சேரும் தேவை எமக்கு இல்லை. இப்போது அந்தக் கட்சியுடன் சேர்ந்து நாம்படும்பாடு போதும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)



# துணிச்சல்மிக்க இளைஞர்களுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும்

## கேட்கிறார் வேட்பாளர் கிஷோர்

யாழ்ப்பாணம், ஜன.27

மக்களோடு மக்களாக களத்தில் நிற்கின்ற துணிச்சல் மிக்க இளைஞர்களுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி நகரசபை வேட்பாளர் ஞா.கிஷோர் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் சாவகச்சேரி நகர இளைஞர் கழக செயலாளர் மு.கோகுல்றாஜ் அமைப்பாளர் ச.துவாரகன் மற்றும் இளைஞர்கள் சகிதம் நகர வட்டாரத்தில் பிரசாரத்தில் ஈடுபடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்று தேர்தல் என்றதும் நாம்தான் மக்களோடு நிற்பவர்கள் பணி செய்யப் பிறந்தவர்கள் என்று கூறிக்கொண்டு பொதுநல சிந்தனைகூட இல்லாமல் தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று இருந்தவர்கள் பலரும் உங்கள் வீட்டு படலைகளை தட்டக்கூடும். உங்களை திரும்பியும் பார்க்காமல் தீண்டத்தகாதவர்கள் என்ற எண்ணம் கொண்டவர்கள் கூட உங்கள் முற்றங்களை மிதிக்க கூடும். இப்படியான பலர் இன்று பல கட்சிகளில் வேட்பாளர்களாக உள்ளனர். ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுபவர்கள் மட்டுமே மக்களோடு மக்களாகவும் மக்களுக்கு நன்கு பரிச்சயமானவர்களாவும் உள்ளனர்.

அதிலும் குறிப்பாக எங்களைப்போன்ற இளம் வேட்பாளர்கள் சமூக நலன்சார் செயற்பாடுகளோடு மட்டும் நின்றுவிடாமல் தமிழ்தேசிய உரிமைக்கான போராட்டங்களிலும் துணிச்சலோடு பங்கெடுக்கின்றனர். எனவே எமது மக்கள் அனைவரும் எமது ஒற்றுமையை வெளிப்படுத்தி தமித்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வரலாற்று வெற்றியை பெற்றுக்கொள்ள பங்களிக்குமாறு சாவகச்சேரி நகர சபை வேட்பாளர் ஞா.கிஷோர் தனது பிரசாரங்களின் போது பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார். (ச)



வடமாகாண சபையின் புதிய உறுப்பினராக சபா. குகதாஸ் பதவியேற்பின் பின்னர் ஆளுநர் அலுவலகத்தில் எடுத்துக்கொண்ட படம். (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்




# இடைக்கால அறிக்கையில் தமிழர் கோரிக்கை நிராகரிப்பு

அம்பாறை, ஜன. 27

புதிய அரசியல் யாப்பிற்கான இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்களின் அடிப்படை கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

ஒற்றையாட்சியை அடிப்படையாக கொண்டே அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டபோதிலும், அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் தம்பிலுவில் வடக்கு 2ஆம் வட்டாரத்தில் இடம்பெற்ற தேர்தல் கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஒற்றையாட்சி என்பதில் எந்த விதமான மாற்றமும் இல்லை என ஜனாதிபதியும், பிரமதரும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தெரிவித்துள்ளனர். ஒற்றையாட்சியானது மூன்று மொழிகளிலும் ஒற்றையாட்சியாகவே இருக்கும்.

ஆனால் சம்பந்தனும், சுமந்திரனும் கூறுகின்றனர் சிங்களத்தில்தான் எக்கியராட்சிய தமிழில் ஒருமித்த நாடு ஒரு சிங்கள சொல்லுக்கு இதுவரையில் இருந்த தமிழ் மொழிபெயர்ப்பு ஒற்றையாட்சி என்பதாகும். ஆனால் இன்று மொழி பெயர்ப்பினை மாற்றுகின்றனர் ஒருமித்த நாடு என்று இது தனக்கு விளங்கவில்லை - என்று மேலும் அவர் தெரிவித்தார். (ச)

## தொடர்ச்சிகள்

### சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் ஆ.நடராஜன், யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

375 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள், துணை நிறுவனங்கள் பங்கேற்றுள்ள இக் கண்காட்சியை இன்றும் நாளையும் பார்வையிடவும், பொருள்களை பெறவும் முடியும். (ச) (மேலும் படங்கள் 3ஆம் பக்கத்தில்)

### போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் அடிப்படையில் ஐவரைக் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவர் அளித்த வாக்கு மூலத்தில் 'நான் போதைப் பொருளுக்கு அடிமையானவன். சம்பவம் நடந்த தினத்தன்று போதை மருந்தைப் பாவித்தேன். அது எனக்குப் போதாதிருந்து. பணமும் இருக்கவில்லை. இதனால் மூதாட்டியின் வீட்டுக்குள் நுழைந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த அவரை, ஸ்டூலால் அடித்துக் கொன்றேன்.

பின்னர் நகைகளை எடுத்துக் கொண்டு சண்டிலிப்பாயில் உள்ள நண்பனிடம் கொடுத்து 15 ஆயிரம் ரூபா கேட்டேன். 5 ஆயிரம் ரூபா தந்த அவர் மீதியைப் பிறகு தருகிறேன் எனக் கூறினார்' என்று கூறினார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

### மது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் பெண்களுக்கு வழங்கப்பட்ட உரிமை பறிக்கப்பட்டுவிட்டது. தவிர, விருப்பமான தொழிலை செய்யும் உரிமையும் மீறப்பட்டுவிட்டதாக அந்த மனுக்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மேலும், இராணுவம், கடற்படை சட்டத்தின் கீழ் நடத்தப்படும் விற்பனை, உணவு நிலையங்களில் மதுவை கொள்வனவு செய்யவும், குடிக்கவும் முடியும் என மனுதாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக நிதியமைச்சர் மங்கள சமரவீர, கலால் திணைக்கள ஆணையாளர், சட்ட மா அதிபர், அமைச்சின் செயலாளர் உட்பட அறுவரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ச)

### ரூ. 9 இலட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய சந்திப்பில் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நாட்டின் கடன்தொகை குறித்து மக்களுக்கு வெளிப்படுத்துவது கட்டாயம். கடந்த 10 வருடங்களில் எனது 3 வருடங்களும் உள்ளடங்க வெளிநாடுகளில் பெற்ற கடனை பலர் துஷ்பிரயோகம் செய்துள்ளனர். நிதி மோசடியை நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். எனது எதிர்காலம் குறித்து நான் கவலைப்படவில்லை.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை. ஆனால் அரசியலில் இருந்து நான் ஓய்வு பெறப் போவதில்லை. ஜனாதிபதியாகத் தெரிவாகும் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகவோ, பிரதமராகவோ பதவி வகித்திருக்க வேண்டும். ஆனால் நான் அவ்வாறான பதவி எதையும் வகிக்காத நிலையில் ஜனாதிபதியாகத் தெரிவானேன். நாடு இருந்த நிலையில் நடந்த விடயம் அது. இதேபோல் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவேனா? மாட்டேனா? என்று தெரியாது. அது குறித்துத் தீர்மானிக்கவில்லை. ஆனால் அரசியலில் தொடர்ந்து இருப்பேன் என்பது உறுதி" - என்றார். (ச)

### விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த டிசம்பர் 24 ஆம் திகதி மரணச் சடங்கில் பங்கேற்ற இவரும் இன்னொரு இளைஞரும் மோட்டார் சைக்கிளில் திரும்பினர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் அராலி வைத்தியசாலை முன்பாக மின்கம்பத்துடன் மோதித் தீப்பிடித்தது. மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்திருந்தார்.

மற்றையவரைக் காப்பாற்றிய பொது மக்கள் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். அங்கு கடந்த ஒரு மாதமாக சிகிச்சை அளிக்கப்பட்டபோது அது பலனின்றி நேற்று அவர் மரணமானார். (ச)

### 9 மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்க இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. இது, இணைந்த வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கான அதிகாரங்களை வழங்கும் நோக்கிலேயே ஏற்படுத்தப்பட்டது. இருந்த போதும், சிங்கள மக்களை சமாதானம் செய்ய அனைத்து மாகாணங்களுக்கும் அது விரிவுபடுத்தப்பட்டது. தமிழர்களுக்கு எனப் பிரத்தியேகமாக எதையும் வழங்கவில்லை என சிங்கள மக்களுக்குக் காட்ட அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கையாண்ட தந்திரமே அது.


இதே அடிப்படையில் ஒன்பது மாகாணங்களுக்கும் சமஷ்டியை வழங்க இன்றைய அரசாங்கம் முன்வர வேண்டும். எந்த இரு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்கள் ஒன்றிணையவும் வழிவகுக்க வேண்டும். ஏனென்றால் என்ன நோக்கத்திற்காக 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டதோ அந்த விடயங்கள் அனைத்தும் உரு மறைப்புச் செய்யப்பட்டு தமிழ் மக்களுக்கு தரப்படவேண்டிய உரிமைகள் அனைத்தும் மறைக்கப்பட்ட ஒரு நிலையிலேயே நாம் இன்று இங்கு வாழ்கின்றோம்.

இருந்த உரித்துக்களையும் இழந்து ஏதிலிகளாக வாழ்கின்ற ஓர் துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் இங்கு தள்ளப்பட்டுள்ளோம். காரணம் முத்தரப்பு நிர்வாகங்கள் இங்கு நடந்துகொண்டிருக்கின்றது. ஆளுநர், அரசாங்க அதிபர் ஆகியோர் எமக்கு மேலதிகமாக மத்திய அரசின் அனுசரணையுடன் நிர்வாகம் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு கையால் தருவது போன்று பாசாங்கு செய்து மறு கையால் இருப்பதையும் பிடுங்கி எடுக்கின்ற நடவடிக்கைகளே தொடர்ந்து இங்கு முன்னெடுக்கப்படுகின்றது. சகல மாகாணங்களுக்கும் சமஷ்டி அடிப்படையில் தீர்வு கிடைத்தால் வட, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி மத்தியால் எமக்குப் பங்கம் விளைவிப்பதை நாம் தடுக்கலாம் - என்றார். (ச)

### 'கிறீன் கார்ட்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும். இவர்கள் வேலையை இழந்தால் புதிய வேலையில் சேர அவகாசம் வழங்கப்படும். அத்துடன் வேலை செய்பவரின் துணைவருக்கும் பணியாற்ற அனுமதி கிடைக்கும். (ச)



# விமானம் வீழ்ந்து நால்வர் மரணம்

சூரிச், ஜன.27

சுவிட்ஸர்லாந்தில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், 2 விமானிகள் உட்பட நான்கு பேர் பலியாகியுள்ளனர்.

சுவிஸின் பாசல் நகரில் உள்ள விவசாய நிலத்திலேயே குறித்த சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி வீழ்ந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இந்த விபத்தில், 4 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில், சுவிஸைச் சேர்ந்த 61 வயதான விமானியும், 48 வயதான அவருடைய உதவியாளரான விமானியும் அடங்குவர்.

இவர்கள் இருவரும் மிகவும் அனுபவசாலிகளான விமானிகள் ஆவார். ஆனால், விபத்து எவ்வாறு நடந்தது என்று இதுவரை தெரியவில்லை.

மேலும், விபத்து நடந்த இடத்தில் கறுப்பு பெட்டி கிடைக்கவில்லை. விமானத்தின் பாகங்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. (அ)

## சந்திரபாபு நாயுடுவுக்கு

# விமானத்தால் வந்த வினை



விஜயவாடா, ஜன.27

ஆந்திர மாநிலத்தில் நடைபெற்ற இந்தியாவின் குடியரசு தின நிகழ்வில் அந்த மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு போக்குவரத்துப் பிரச்சினையால் கலந்து கொள்ள முடியாமல் போயுள்ளது.

விஜயவாடா, இந்திரா காந்தி விளையாட்டு அரங்கத்தில் மாநில அரசின் குடியரசு தின விழாவை நேற்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் சுவிட்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற சந்திரபாபு நாயுடு ,விமானத்தில் நாடு திரும்பிக் கொண்டிருந்தார்.

சுவிட்சர்லாந்தில் இருந்து அபுதாபிக்கு அவர் முதலில் வந்தடைந்தார். அபுதாபியில் இருந்து ஹைதராபாத்துக்கு அவர் வருவதாக இருந்தது. ஆனால், அபுதாபியில் நிலவிய கடும் பனிமூட்டத்தால் விமானம் மிகவும் தாமதமாகவே புறப்பட்டது. இதனால், விஜயவாடாவுக்கு அவர் வருவார் என எதிர்பார்க்கப்பட்ட நேரத்திலிருந்து 9 மணி நேரம் தாமதமாக வந்தடைந்தார்.

இதனால், அவரால் குடியரசு தின விழாவில் கலந்துகொள்ள முடியவில்லை.

முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் இல்லத்தில் நடந்த குடியரசு தின விழாவில் சந்திரபாபுவுக்குப் பதிலாக அவரது மனைவி தேசியக் கொடியை ஏற்றினார்.

இந்திரா காந்தி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குடியரசு தின விழாவில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களின் ஆளுநர் இ.எஸ்.எல். நரசிம்மன் கலந்து கொண்டு கொடியேற்றினார். (அ)

# இந்தியாவில் நேற்று குடியரசு தினம்

புதுடெல்லி, ஜன.27

இந்தியாவின் 69 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு டெல்லி ராஜ்பாத்தில் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தேசிய கொடியேற்றி நேற்று மரியாதை செலுத்தினார். ஜனாதிபதியான பிறகு அவர் முதன்முறையாகக் கலந்துகொண்ட குடியரசு தின விழா இதுவாகும்.

முன்னதாக, ஜனாதிபதியைப் பிரதமர் நரேந்திர மோடி, பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் முப்படைத் தளபதிகள் வரவேற்றனர்.

தேசியக் கொடியை ஏற்றிவைத்த ஜனாதிபதி, காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிரான சண்டையின்போது வீரமரணம் அடைந்த விமானப்படையை சேர்ந்த ஜோதி பிரகாஷ் நிராலாவுக்கு அசோக் சக்ரா விருது வழங்கிக் கௌரவித்தார். விருதை நிராலாவின் மனைவி பெற்றுக் கொண்டார்.

பொதுவாக இந்தியக் குடியரசுத் தின விழாவின் போது ஏதேனும் ஒரு நாட்டின் தலைவர் தான், சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படுவதுண்டு. ஆனால், இம்முறை விழாவில் 10 ஆசியா நாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர். தாய்லாந்து, இந்தோனேசியா, சிங்கப்பூர், புருனே, லாவோஸ், மியான்மர், கம்போடியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய 10 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)





# தென்கொரியாவில் தீ 31 பேர் கருகிப் பலி

சியோல், ஜன.27


தென் கொரியாவின் மிரியாங் எனும் பகுதியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 31 பேர் உடல் கருகிப் பரிதாபமாகப் பலியாகினர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக மிரியாங் பகுதியின் தீயணைப்புப் படையின் தலைவர் சோய் மான் வூ கூறும்போது, "தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. ஆனால், மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து திடீரெனத் தீ பரவியதாக இரண்டு தாதியர்கள் தெரிவித்துள்ளனர். இதுவரை 31 பேர் பலியாகியுள்ளனர். பலர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். மருத்துவமனைக் கட்டடத்துக்குள் வேறு யாரும் இல்லை" என்றார்.

விபத்து நடந்தபோது அந்த மருத்துவமனையில் 200க்கும் மேற்பட்டோர் இருந்துள்ளனர்.

கடந்த மாதம் தென் கொரியாவில் ஒரு உடற்பயிற்சிக் கூடமொன்றில் தீ விபத்து ஏற்பட்டதில் 29 பேர் பலியாகினர். அந்த சம்பவத்தின் அதிர்ச்சி விலகுவதற்கு முன்னதாகவே மற்றொரு விபத்தும் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இசைஞானிக்கு எடப்பாடி பாராட்டு



சென்னை, ஜன.27

இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு பத்மவிபூஷண் விருது வழங்கப்பட்டுள்ளமைக்கு தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "இசை உலகின் தலைசிறந்த இசையமைப்பாளரான இளையராஜா தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி போன்ற பல்வேறு மொழி திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார். நாட்டுப்புற இசை, கர்நாடக இசை மற்றும் மேற்கத்திய இசையில் புலமையும் முறையான பயிற்சியும் பெற்ற இளையராஜாவுக்கு, இந்தியாவின் இரண்டாவது உயரிய விருதான பத்ம விபூஷண் விருது கிடைத்ததற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அவர் தன் பாராட்டினை அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார். (அ)

# இந்த அவமானம் தேவையா?

வோஷிங்டன், ஜன.27

அமெரிக்காவில் உள்ள உலக புகழ்பெற்ற அருங்காட்சியகம் ஒன்று, ஜனாதிபதி ட்ரம்ப் குடும்பத்துக்கு தங்கத்தால் செய்யப்பட்ட கழிப்பறையைக் கொடுக்க விரும்புவதாகக் கூறி அவமானப்படுத்தியுள்ளது.

நியூயோர்க்கில் அமைந்துள்ள அருங்காட்சியகம் ஒன்றில், பிரபல ஓவியர் வான்கோ, 1888 இல் வரைந்த 'லாண்ட்ஸ்கேப் வித் ஸ்நோ" என்ற ஓவியம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த ஓவியம் தங்களுக்கு வேண்டும் என வெள்ளை மாளிகை சார்பில் கோரப்பட்டிருந்தது.

ஆனால் அந்த ஓவியத்துக்குப் பதிலாக 18 கரட் தங்கத்தால் செய்யப்பட்ட தங்கக் கழிப்பறையை ட்ரம்ப் குடும்பம் வசிக்கும் வெள்ளை மாளிகைக்கு தர விரும்புவதாக அருங்காட்சியகம் சார்பில் கிண்டலாகப் பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கழிப்பறையை விடவும் ஓவியம் பெறுமதியானது என்றும், ட்ரம் குடும்பத்துக்கு ஓவியமெல்லாம் அவசியமில்லை அவர்களுக்கு கழிப்பறையே பொருத்தமானது என்ற ரீதியில் இந்தப் பதில் அமைந்துள்ளது.(அ)





# சாதித்தது இளம் இந்தியா



குயின்ஸ்லாந்து, ஜன.27

19-வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடந்த பங்களாதேஷுக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இதையடுத்து, வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது இந்திய இளம் அணி.

நியூஸிலாந்தில் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடந்து வருகிறது.

நேற்று நடந்த காலிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷை எதிர்த்து இந்திய அணி களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49.2 ஓவர்களில் 265 ஓட்டங்ககளுக்கு ஆட்டமிழந்தது. இந்திய அணித் தரப்பில் சுப்மான் கில் 86 ஓட்டங்களும், அபிஷேக் சர்மா 50 ஓட்டங்களும் சேர்த்தனர்.

இதையடுத்து, 266 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனும் இலக்கோடு களம் இறங்கிய பங்களாதேஷ் அணி இந்திய வீரர்களின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் 42.1 ஓவர்களில் 134 ஓட்டங்களுக்குச் சுருண்டது. (அ)

# தென்னாபிரிக்கா தயார்

ஜொகன்னர்ஸ்பேர்க், ஜன.27

இந்திய அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடருக்கான தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் வேகப்பந்து வீச்சாளர் லுங்கி இங்கிடி, துடுப்பாட்ட வீரர் காயா ஜோன்டோ ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி டெஸ்ட், ஒருநாள், ரி-20 போட்டிகளில் விளையாட உள்ளது. இதில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா தொடரைக் கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில், ஒருநாள் தொடர் பெப்ரவரி 1 ஆம் திகதி தொடங்குகிறது. முதல் ஆட்டம் டேர்பன் நகரில் நடைபெறுகிறது. இந்த தொடரில் பங்கேற்கும் தென்னாபிரிக்க அணி வீரர்கள் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

அதில் வேகப்பந்துவீச்சாளர் லுங்கி இங்கிடி இடம் பெற்றுள்ளார். பிரிடோரியாவில் இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் 6 விக்கெட்டுகள் வீழ்த்தி தேர்வாளர்களின் கவனத்தை ஈர்த்ததால் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சமீப காலமாக காயத்தால் பாதிக்கப்பட்டு இருந்த இங்கிடி இப்போது அதில் இருந்து மீண்டு போட்டியில் பங்கேற்று வருகிறார்.

அதேபோல, கடந்த 2015 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த தென்னாபிரிக்க அணியில் இடம் பெற்ற துடுப்பாட்ட வீரரான காயா ஜோன்டா இந்த முறை வாய்ப்புப் பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்க வீரர்கள் விவரம்:

டு பிளசிஸ்(கப்டன்), ஹசிம் அம்லா, குயின்டன் டீ கொக், டிவில்லியர்ஸ், ஜே.பி. டுமினி, இம்ரான் தாஹிர், எய்டன் மார்க்ரம், டேவிட் மில்லர், மோர்ன் மோர்கல், கிறிஸ் மோரிஸ், லுங்கி இங்கிடி, அன்டில் பெலுக்வேயோ, ரபாடா, டப்ரெய்ஸ் ஷாம்சி, காயா ஜோன்டோ. (அ)

# ஆஸி. வெற்றி



அடிலெய்ட், ஜன.27

அடிலெய்டில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான 4 ஆவது ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலியா அணி மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்ரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும் 4 ஆவது ஒருநாள் போட்டி அடிலெய்டில் நேற்று நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆவுஸ்ரேலியாவின் அபார பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறியது. அந்த அணி 8 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்தது. ஜேசன் ராய், ஜோடுப், பேரிஸ்டோவ், ஜோஸ் பட்லரி ஆகிய 4 வீரர்கள் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் 'டக்' அவுட் ஆனார்கள்.

இங்கிலாந்து அணி 44.5 ஓவருக்கு 196 ஓட்டங்களுக்குள் வீழ்ந்தது. அவுஸ்திரேலியா அணியின் பந்துவீச்சில் கம்மின்ஸ் 4 விக்கெட்களும், ஹசில்வுட், அண்ட்ரூ டை தலா மூன்று விக்கெட்களும் வீழ்த்தினர்.

அதைத்தொடர்ந்து 197 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி தொடக்க ஆட்டக்காரர் ஹெட் எடுத்த 96 ஓட்டங்களின் துணையுடன், 37 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 197 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அவுஸ்ரேலியா அணியின் கம்மின்ஸ் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். (அ)

# ஏலம் ஆரம்பம்



பெங்களூர், ஜன.27

2018 ஐ.பி.எல் கிரிக்கெட் தொடருக்கான வீரர்கள் ஏலம் பெங்களூரில் இன்று தொடக்கம் இரண்டு நாள்கள் நடைபெற உள்ளது.

ஏப்ரல் மாதம் 2018 ஆம் ஆண்டுக்கான 11 ஆவது ஐ.பி.எல் தொடர் கோலாகலமாக தொடங்க இருக்கிறது.

இந்தத்தொடரில், பங்கேற்கும் அணிகளில் விளையாட இருக்கும் வீரர்களுக்கான ஏலம் இன்றும், நாளையும் பெங்களூரில் நடக்கிறது. ஏற்கனவே 18 வீரர்கள் 8 அணிகள் மூலம் தக்க வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் டோனி, ரெய்னா, ஜடேஜா ஆகியோர் தக்கவைக்கப்பட்டுள்ளனர். வீரர்கள் ஏலத்தில் 360 இந்தியர்கள் உள்பட 578 வீரர்கள் இறுதிப் பட்டியலில் இடம் பெற்றுள் ளனர். இந்தியர்களில் 62 பேர் சர்வதேசப் போட்டியில் விளை யாடிய வீரர்கள் ஆவார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் ஏலத்தில் ஒவ்வொரு அணியும் குறைந்தபட்சம் 60 கோடிக்கு வீரர்களை ஏலத்தில் எடுக்க வேண்டியிருக்கும். அதே நேரத்தில் அதிகபட்சமாக 80 கோடி ரூபா செலவழித்து 25 பேர் கொண்ட அணியை ஏலத்தில் எடுக்கலாம். இந்தத் தொகை கடந்த ஆண்டு 66 கோடி ரூபாயிலிருந்து 80 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

வீரர்களின் ஏலப்பட்டியலில் அதிகபட்ச அடிப்படை விலையாக கோடி ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 36 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் 13 பேர் இந்தியர்கள், 23 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள். (அ)

# இறுதியில் பெடரர்



மெல்பேர்ன், ஜன.27

அவுஸ்ரேலியா பகிரங்க டென்னிஸ் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ரோஜர் பெடரர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. இதில் 2 ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர் தரநிலை பெறாத கொரிய வீரர் சங்-ஐ எதிர்கொண்டார்.

இந்தப்போட்டியில் அதிரடியாக விளையாடிய பெடரர் முதல் செற்றை 6-1 எனக் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றிலும் பெடரர் அதிரடி ஆட்டத்தை வெளிகாட்டினார். ஆனால் சங் காயம் காரணமாக இந்தப்போட்டியில் இருந்து இடையிலேயே விலகினார். இதனால் பெடரர் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இன்று நடக்கும் இறுதிப் போட்டியில் ரோஜர் பெடரர் - மரின் சிலிச் பலப்பரீட்சை நடத்த உள்ளனர். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 27.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.